எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், 110, அண்ணா சாலை, சென்னை–2.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு.ரா.மல்லிகா,
இணை இயக்குநர்.

இயக்.செ.மு.ஆ.எண்.இ1/17956/2017 நாள்: 29.03.2019

பொருள் பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2 – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு தட்டச்சராக பணி நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்ட எஸ்.பிரியதர்ஷினி உள்ளிட்ட 5 நபர்கள் நேரடி நியமனம் மூலம் தற்காலிக தட்டச்சர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் திருமதி.எஸ்.பிரியதர்ஷினி உள்ளிட்ட 5 நபர்கள் தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் தற்காலிக பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை
1. செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை–3 க.எண்.5895/PSD-F2/2017 நாள் 25.09.2017
2. இயக்.செ.மு.ஆ.எண்.இ1/17956/2017 நாள் 19.10.2017 நாள் 04.02.2016

----

ஆணை:

பார்வை 1ல் காணும் 25.09.2017 நாளிட்ட, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் கடிதத்தின்படி எஸ்.பிரியதர்ஷினி உள்ளிட்ட 7 நபர்கள் இத்துறைக்கு நேரடி நியமனம் மூலம் தட்டச்சர்களாக பணி நியமனம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, எஸ்.பிரியதர்ஷினி உள்ளிட்ட 5 நபர்கள் பார்வை 2ல் காணும் 19.10.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி எழுதுபொருள் மற்றும்

அச்சுத்துறையில் தட்டச்சர்களாக பணியமர்த்தி ஆணையிடப்பட்டு கீழே அட்டவணையில் கலம் 3ல் கண்டுள்ள அலகுகளில் கலம் 4ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

அட்டவணை

| வ. எண் | தட்டச்சர் பெயர் | பணிபுரியும் அலகு | தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | S.பிரியதர்ஷினி | அரசு எழுதுபொருள் அலுவலகம்,சென்னை–1 | 27.10.2017 முற்பகல் |
| 2. | M.சுந்தர் சிங் | அரசு கிளை அச்சகம், மதுரை–23 | 25.10.2017 முற்பகல் |
| 3. | G.முப்பிடாதி | அரசு கிளை அச்சகம், மதுரை–7 | 25.10.2017 முற்பகல் |
| 4. | R.சசிகலா | அரசு கிளை அச்சகம், மதுரை –7 | 25.10.2017 முற்பகல் |
| 5. | B.செந்தில்குமார் | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 27.10.2017 முற்பகல் |

2) பார்வை 1–ல் காணும் 25.09.2017 நாளிட்ட செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் பத்தி எண்.5ல் தெரிவித்துள்ளவாறு, மேலே அட்டவணையில் வரிசை எண்.1 முதல் 5 வரை குறிப்பிடப்பட்டுள்ள தட்டச்சர்களின் பணியானது, மேதகு சென்னை உயர்நீதிமன்றம்/மேதகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள 2015–2016ம் ஆண்டிற்கான குரூப் IV பணியாளர் நேரடி நியமனம் குறித்து (writ petition) நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு உட்பட்டு தனியார்களின் பணியானது, மேலே அட்டவணையில் கலம் 4–ல் குறிப்பிட்டுள்ள தட்டச்சர்கள் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்தும், அந்நாள்முதல் இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்தும், மேற்படி இரண்டாண்டு தகுதிகாண் பருவகாலத்தைத்

தொடர்ச்சியான, மூன்றாண்டு காலத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்றும், தகுதிகாண் பருவகாலத்தில் "Certificate Course in Computer on Office Automation" தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்றும், இத்தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர்தான் தனியர்களின் தகுதிகாண் பருவம் விளம்பப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

3) சம்பந்தப்பட்ட நபர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலகு தலைவர்களுக்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தி.ரா.மல்லிகா
இணை இயக்குநர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட தட்டச்சர்கள்—சம்பந்தப்பட்ட அலகுத் தலைவர்கள்—மூலமாக
நகல் பெறுநர்

1) துணை இயக்குநர், அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை—1 —2 நகல்கள்
2) துணைப் பணிமேலாளர், அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மதுரை—23. 2 நகல்கள்
3) துணைப் பணிமேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை—7. 2 நகல்கள்
4) துணைப் பணிமேலாளர், அரசு கிளை அச்சகம், சேலம்.2 நகல்கள்
5) கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை., 2 நகல்கள்
6) கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.2 நகல்கள்
7) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம், மதுரை.
8) மாவட்ட கருவூல அலுவலர், மாவட்ட கருவூல அலுவலகம், புதுக்கோட்டை.
9) மாவட்ட கருவூல அலுவலர், மாவட்ட கருவூல அலுவலகம், சேலம்.
10) சார்நிலை கருவூல அலுவலர், சார்நிலை கருவூல அலுவலகம், விருத்தாசலம்.
11) சம்பளக் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு) சென்னை—1.
உதிரி — 3 படிகள்

நகல் பெறுநர்
1. இயக்குநர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக
2. இணை இயக்குநர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

இயக்குநருக்காக / நேர்முக உதவியாளர்
110, அண்ணா சாலை, சென்னை

அரசு கிளை அச்சகம்
சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை
மதுரை—625 023

அ.இ.மே.இ.எண்: அ1/1075/17 நாள்: 8.4.19

நகல் வழங்கப்படுகிறது.

துணைப் பணிமேலாளர்
அரசு கிளை அச்சகம்
சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை
மதுரை—625 023

பெறுநர்

திரு.மோ. சுந்தர்சிங்,
கட்டச்சர்,
அரசு கிளை அச்சகம்,
சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை
மதுரை-23